சுருக்கம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) – திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து மாதர்பாக்கம் எனும் புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது – இறுதி ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) பிரிவு 15, உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [பரா–2(1)] துறை

அரசாணை (நிலை)எண். 29

நாள். 09.02.2026.
விசுவாவசு, தை 26,
திருவள்ளுவர் ஆண்டு 2057
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.345, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [(ப.ரா–2(1)]த் துறை, நாள் 08.12.2025.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 817, நாள் 08.12.2025.
3. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1800/2024/அ3, நாள்.19.01.2026.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/ப.ரா.1.1, நாள்.21.01.2026.

-------

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து உத்தரவிடப்பட்டது. அதில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 61 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 39 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி மாதர்பாக்கம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் அரசு ஆணையிட்டுள்ளது.

2. இதனை தொடர்ந்து, இரண்டாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 817, நாள் 08.12.2025-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் படி தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும், அவ்வாறு அந்த உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவுக்குள் மறுப்பு ஏதும் பெறப்பட்டால் அதனை அரசு உரிய பரிசீலனை செய்யும்பொருட்டு எழுத்து மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது:

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உத்தரவிடப்பட்டது. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 15, உட்பிரிவு (1)-ன் கீழ் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 39 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி மாதர்பாக்கம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்குவதற்கும் பொதுமக்களிடமிருந்து 08.12.2025 முதல் 19.01.2026 வரை எந்த மறுப்புகளும் பெறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. எனவே, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பின் அடிப்படையில் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 39 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி மாதர்பாக்கம் எனும் புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கியும் மேலே 1 மற்றும் 2-இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கை தொடர்பாக அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறப்படாத நிலையில் இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய

கருத்துருவினை அரசுக்கு அனுப்பி இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கையில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டத்தில் அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறப்படாத நிலையில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 39 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 22 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி **மாதர்பாக்கம்** என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் மறுசீரமைப்பு செய்து இறுதி ஆணை மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு–15, உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை வெளியிடவும் உறுதி செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

7. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமூதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Block), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும். அதனடிப்படையில், இந்த அரசாணையின்படி, பிரிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் எல்லை வரையறை 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும்.

8. இவ்வாணையினைத் தொடர்ந்து, 09.02.2026 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I & II) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**<u>பெறுநர்</u>**
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75
(09.02.2026 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.

A

மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9.2.2026
பிரிவு அலுவலர்.

## APPENDIX
## NOTIFICATION - I

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the notification published in respect of declaration of Gummidipoondi Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas specified below, from the Gummidipoondi Panchayat Development Block so as to constitute them as a separate panchayat development block. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Budhur.
(2) Sethilpakkam.
(3) Eguvarpalayam.
(4) Erukkuvoy.
(5) Kannambakkam.
(6) Kannankottai.
(7) Karadiputhur.
(8) Kollanur.
(9) Manellore.
(10) Madarpakkam.
(11) Mukkarambakkam.
(12) Nelvoy.
(13) Nemalur.
(14) Pathirivedu.
(15) Pallavada.
(16) Periyapuliyur.
(17) Pondavakkam.
(18) Poovalambedu.
(19) Sanaputhur.
(20) Siruvaada.
(21) Soorapoondi.
(22) Thervoy.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Nandu
9.2.2026
Section Officer.

## அறிவிக்கை – I

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (1)–ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், மேற்காணும் சட்டத்தின் 15–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி கும்மிடிபூண்டி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்தும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கும்மிடிபூண்டி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக ஏற்படுத்துவதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை கும்மிடிபூண்டி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து இதனால் நீக்குகிறார். மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) பூதூர்.
(2) செதில்பாக்கம்.
(3) ஈகுவார்பாளையம்.
(4) எருக்குவாய்.
(5) கண்ணம்பாக்கம்.
(6) கண்ணன் கோட்டை.
(7) கரடிபுத்தூர்.
(8) கொள்ளானூர்.
(9) மாநெல்லூர்.
(10) மாதர்பாக்கம்.
(11) முக்கரம்பாக்கம்.
(12) நெல்வாய்.
(13) நேமளூர்.
(14) பாதிரிவேடு.
(15) பல்லவாடா.
(16) பெரியபுலியூர்.
(17) போந்தவாக்கம்.
(18) பூவலம்பேடு.
(19) சாணாபுத்தூர்.
(20) சிறுவாடா.
(21) சூரப்பூண்டி.
(22) தேர்வாய்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

9.2.2026
பிரிவு அலுவலர்.

## NOTIFICATION-II

In exercise of the powers conferred by sub-section (3) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby declares the local areas specified below, to be a panchayat development block, namely Madarpakkam Panchayat Development Block and also declares the said panchayat development block to be a panchayat union, namely, Madarpakkam Panchayat Union, the intention to declare the same having been published as required under sub-section (1) of section 15 of the said Act. Based on the above constitution of Madarpakkam Panchayat Union, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Budhur.
(2) Sethilpakkam.
(3) Eguvarpalayam.
(4) Erukkuvoy.
(5) Kannambakkam.
(6) Kannankottai.
(7) Karadiputhur.
(8) Kollanur.
(9) Manellore.
(10) Madarpakkam.
(11) Mukkarambakkam.
(12) Nelvoy.
(13) Nemalur.
(14) Pathirivedu.
(15) Pallavada.
(16) Periyapuliyur.
(17) Pondavakkam.
(18) Poovalambedu.
(19) Sanaputhur.
(20) Siruvaada.
(21) Soorapoondi.
(22) Thervoy.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Naadu
9.2.2024
Section Officer.

## அறிவிக்கை – II

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (3)–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் 15–ஆம் பிரிவின் உட்பிரிவு (1)–இன் கீழ் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்காக ஒரு ஊராட்சி ஒன்றியம் அதாவது மாதர்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தை அமைத்துருவாக்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை விளம்புகை செய்வதற்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய நோக்கத்தை ஈங்கிதனால் அறிவிக்கிறார். மேற்சொன்ன ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கத்தின் அடிப்படையில் வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) பூதூர்.
(2) செதில்பாக்கம்.
(3) ஈகுவார்பாளையம்.
(4) எருக்குவாய்.
(5) கண்ணம்பாக்கம்.
(6) கண்ணன் கோட்டை.
(7) கரடிபுத்தூர்.
(8) கொள்ளானூர்.
(9) மாநெல்லூர்.
(10) மாதர்பாக்கம்.
(11) முக்கரம்பாக்கம்.
(12) நெல்வாய்.
(13) நேமளூர்.
(14) பாதிரிவேடு.
(15) பல்லவாடா.
(16) பெரியபுலியூர்.
(17) போந்தவாக்கம்.
(18) பூவலம்பேடு.
(19) சாணாபுத்தூர்.
(20) சிறுவாடா.
(21) சூரப்பூண்டி.
(22) தேர்வாய்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.